**உடுநுவர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 மற்றும் 2.2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக உடுநுவர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 143,540 பெறுமதியான 03 அலுவலக உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் புறநெகும செயற்திட்டத்திலிருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 563,851 பெறுமதியான 05 அலுவலக உபகரணங்கள் ரூபா 109,548 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் அச்சொத்துக்கள் ரூபா 454,303 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் அழிக்கப்பட்ட ரூபா 62,619 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து நீக்கப்படாமல் 2018 இல் அழிக்கப்பட்ட ரூபா 71,196 தொகையான புத்தகங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 40,000 பெறுமதியான 02 கைவண்டிகள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 381,501 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைக்கப்பெற்ற ரூபா 762,337 ஆன நீதிமன்ற தண்டப்பணம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) முத்திரைக் கட்டண பதிவேட்டின் பிரகாரம் 2017 சனவரி 01 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 62,559,862 கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணக்கில் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டிற்குரிய வீதவரி மிகை கட்டண பட்டிடயலிடல் ரூபா 982,169 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 178,250 தொகை ஆண்டில் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய வீதவரி மிகை கட்டணம் ரூபா 803,919 ஆன பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டில் ரூபா 418,499 ஆன நீதிமன்ற தண்டப்பண பெறுவனவு வருமானக் கணக்கில் பொது நிர்வாக பிடியாணை கட்டணங்கள் மற்றும் தண்டப்பணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதும்இப்பெறுமதி மீண்டும் சுகாதார சேவைகளின் கீழ் ஆண்டின் வருமானமொன்றாக காண்பிக்கப்பட்டு பெற வேண்டிய வருமானங்களின் கீழும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது

(ஒ) முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 189,661 ஆன வீதவரி வருமானமொன்று நிலுவை வரி வருமான கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் அதன் இறுதிமீதிக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 189,661 வீதவரி வருமானமொன்று நிலுவை வரி வருமான கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் அதன் இறுதி மீதிக்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 54 ஆக வாகன நிறுத்துமிடல் கட்டணத்தொகை ரூபா 500,054 என விசேட கட்டண வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 500,000 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஃ) 04 வரவு தலைப்புக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 40,242,820 ஆன வருமானம், உரிய வரவு தலைப்புகளுக்கு செலவு வைக்கப்படாமல் 09 சந்தர்ப்பங்களில் ஏனைய தலைப்புகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தன.

(க) பொது நிர்வாக நிகழ்ச்சித்திட்டத்தின் உதவிகள் (1.71 மற்றும் 1.73) இன் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 36,955,750 ஆன வருமானம், மீண்டும், மூலதன வருமானம் (1.81) இன் கீழும் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கா) சுகாதார சேவைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 427,200 வருமானம் மீண்டும் ஏனைய நன்கொடையின் கீழ் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கி) முன்னைய ஆண்டிற்கு 12 செலவின விடயங்களின் கீழ் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,148,816 ஆன செலவினம் மீளாய்வாண்டின் கொடுப்பனவு செய்யும் போது மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கருதி

கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டமையால் அப்பெறுமானத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) நூலக புத்தக மானியம் மற்றும் போட்டிகளை நடாத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 210,000 ஆன நிதி ஏற்பாடு ரூபா 370,000 என தவறாக குறிப்பிட்டமை மற்றும் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினம் இனங்காணப்படாமல் மொத்த நிதிஏற்பாட்டு தொகையும் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(கு) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார சேவைகளின் கீழ் செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் படிகள் ரூபா 111,823 ஆன செலுத்தப்படாத சம்பளம் மற்றும் வேதனங்கள் கணக்கில் பதிவு செய்யப்படாமல் பொது வழங்கல் கடன் கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கூ) மீளாய்வாண்டிற்குரிய 10 செலவின விடயங்களுக்குரிய 10 சந்தர்ப்பங்களின் போது 2018 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 823,812 தொகை மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) நானாவித வைப்புக்கள் மீதி, ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 78,295 பெறுமதியான நானாவித வைப்புக்களின் பெறுமதி நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கே) ஊழியர் கடன் வழங்கலுக்காக திறக்கப்பட்டுள்ள 4070335 ஆம் இலக்க இலங்கை வங்கியின் நடைமுறைக் கணக்கிற்கு பொது நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள்ள 4070181 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிலிருந்து மாற்றப்பட்ட ரூபா 3,000,000 தொகை தவறுதலாக ஊழியர் கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமை காரணமாக ஊழியர் கடன் கணக்கு ரூபா 3,000,000 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கை) மீளாய்வாண்டில் ரூபா 16,000,000 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைந்ததன் காரணமாக பணமாக மாற்றி மற்றுமொரு வங்கியில் முதலீடு செய்யும்போது அப்பெறுமதி முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மூலதனச் சொத்துக்கள் விற்பனை வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(கொ) மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்படாத ரூபா 1,000,000 தொகை முதலீட்டுக் கணக்கீட்டு வரவு வைக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் முதலீட்டின் கணக்கு கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(கோ) 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டினுள் சபை நிதியம் மற்றும் வெளிவாரி ஏற்பாடுகளின் பேரில் நிறைவேற்றப்பட்ட 34 கைத்தொழில்களுக்காக கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,588,852 ஆன கூட்டுப் பெறுமதியொன்று மீளாய்வாண்டில் மீண்டும் ஒருமுறை அப்பெறுமதி கடன்கொடுத்தோராக கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு மூலதனச் சொத்துக்களில் திருத்தம் மற்றும் பராமரிப்பு செலவினக் கணக்கு மற்றும் மூலதன செலவினக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(கௌ) பிரதேச சபை கட்டிடத்திற்கு பூச்சு பூசுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,335,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி தவறாக ரூபா 13,350,000 என கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனச் சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்புச் செலவினம் ரூபா 12,105,000 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ப) 2014 முதல் 2016 வரையான ஆண்டுகளுக்குரிய பொது வைப்புக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் ரூபா 501,103 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(பா) மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்படாத ரூபா 1,375,000 பெறுமதியான 10 நிர்மாண வேலைகள் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(பி) வெளிவாரி நிதியேற்பாட்டிலிருந்து நிறைவேற்றப்பட்ட கைத்தொழில்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,057,425 தொகை ரூபா 4,493,258 என கணக்கீடு செய்த காரணத்தினால் நிர்மாணக் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன மானியம் வருமானக் கணக்கு ரூபா 2,435,833 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(பீ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த எழுதுகருவிகளின் பெறுமதி ரூபா 397,964 ஆக இருந்த போதிலும் அது ரூபா 593,735 என கணக்கீடு செய்த காரணத்தினால் எழுதுகருவி இருப்புக் கணக்கு ரூபா 195,771 ஆல் குறைத்தும் ஆண்டின் எழுதுகருவி செலவினம் அப்பெறுமதியால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இறுதி மீதிகள் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதிகளுக்கு இடையே 22 கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 123,659,729 ஆன இணக்கமிண்மை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 13 கணக்கு மீதிகள் மற்றும் பயன்பாட்டு பட்டோலைகளுக்கு இடையே ரூபா 54,822,229 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

(இ) பி.ச 12 செலவின பதிவேட்டில் செலவின கணக்கில் அதற்குரிய மீதிகளுக்கு இடையே 04 செலவின விடயங்களின் ரூபா 869,004 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம், இடர் கடன் மீதி மற்றும் சம்பள பிரிவின் ஊழியர் கடன் தகவல்களின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே 56 உத்தியோகத்தர்களின் ரூபா 452,108 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

(உ) நிர்மாணக் கடன்கொடுத்தோர் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொடுப்பனவு ரூபா 6,603,434 ஆக இருந்த போதிலும் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் ஆண்டினுள் கொடுப்பனவு ரூபா 7,665,654 ஆக

இருந்தமையால் ரூபா 1,062,220 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.

(ஊ) எழுதுகருவி உப பட்டோலைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 150,877 ஆக இருந்த போதிலும் கணக்கின் பிரகாரம் அது ரூபா 594,003 ஆக இருந்தமையால் ரூபா 443,126 ஆன இணக்கமின்மையொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 தொங்கல் கணக்கு**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,667,314 ஆன தொங்கல் கணக்கு மீதி தீர்வு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 7 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 54,701,753 தொகையானதுடன் அதற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34,596,380 தொகையானதுடன் அதற்குரிய காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

(அ) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறுகள் சீராக்கப்பட்டு 2017 சனவரி 01 இல் உள்ளவாறு பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களுக்குரிய பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 122,864,467 தொகையான 09 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

(இ) சுகாதார சேவைகள் ஏனைய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,092,751 ஆன கூட்டுப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு வருமான விடயங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை.

(ஈ) 2017 திசெம்பர் மாதம் ரூபா 24,185 பெறுமதியொன்று ஓய்வூதிய மற்றும் பங்களிப்பு தொகை செலவினக் கணக்கு செலவு வைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்படாத சம்பளம் மற்றும் வேதனக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 16,940 ஆன மீதி பரீட்சிப்பதற்கு தேவையான கொடுப்பனவு விபரங்கள் மற்றும் கோவைகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் ரூபா 132,479 தொகை கொடுப்பனவு திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டு முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட போதிலும் அதற்குரிய நாட்குறிப்பு பதிவுகளோ பதிவேட்டிற்குட்பட்ட சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(எ) மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்ட ரூபா 19,401,177 ஆன நிர்மாண கடன் கொடுத்தோர் மீதிகளுக்கு உரிய இனங்காணப்பட்ட அட்டவணையொன்று மற்றும் நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3.6 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி<br>ரூபா | இணங்காமை |
|---|---|---|---|
| (அ ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| | (i) விதி 32 | 10,288,937 (ஆண்டில் பட்டியலிடல்) | வீத வரி கொடுப்பனவு செய்யப்பட வெண்டிய சகல கட்டிடங்கள் மற்றும் காணி தொடர்பான வீதிவரி பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) விதி 59 | - | சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில் தொடர்பான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) விதி 218 | 111,927,750 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1996 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய 935/06 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 22(1) ஆம் பிரிவு | | காணி ஏலவிற்பனைக்குரிய துண்டாக்கல்களின் போது சபைக்கு வழங்கப்பட்ட 24 பேர்ச் மற்றும் 46 பேர்ச் அளவிலான 02 காணி துண்டுகள் விநோத நடவடிக்கைகள் அல்லது திறந்த வெளியொன்றாக அபிவிருத்தி செய்யாமல் பயன்பாடின்றி காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) 396(ஈ) | 31,562 | நடைமுறைக் கணக்கென்றுக்குரிய வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 03 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) 571(3) | 461,822 | 1980 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 191 சந்தர்ப்பங்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ஒப்பந்த வைப்புக்கள் மற்றும் நானாவதிவைப்புத் தொகைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | |
| | (i) 2011 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 2/2011 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01(04) ஆம் பந்தி | 1,640,654 | சாத்தியவள ஆய்வொன்று இல்லாமல் 03 நிர்மாணங்களுக்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2017 திசெம்பர் 27 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்பீ1/1ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | - | உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்குரிய நிதியம் சேகரிப்பதற்காக ஒரு பொது நிதியக் கணக்கொன்று மாத்திரம் உரிய விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் பிரகாரம் பேணப்பட வேண்டிய போதிலும் அதற்கு மேலதிகமான ஊழியர் கடன் கொடுக்கல் வாங்கல்களுக்காக வேறு நடைமுறைக் கணக்கொன்று பராமரிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 41,190,418 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய

ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 57,207,972 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரி மற்றும் வரி | 6,770,000 | 12,484,060 | 8,276,425 | 17,044,620 | 7,257,142 | 5,005,511 | 3,513.992 | 14,364,585 |
| (ii) | வாடகை | 1,473,000 | 1,280,180 | 1,205,740 | 800,262 | 1,206,000 | 1,556,752 | 1,657,160 | 66,860 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 1,301,000 | 1,411,600 | 1,411,600 | -- | 1,651,500 | 2,350,000 | 2,350,000 | -- |
| (iv) | ஏனைய வருமானம் | 29,000,000 | 32,857,590 | 38,963,237 | 15,584,440 | 30,374,000 | 849,546,335 | 731,061,716 | 41,367,021 |
| | மொத்தம் | 38,544,000 | 48,033,430 | 49,857,002 | 33,429,322 | 40,488,642 | 858,458,598 | 738,582,868 | 55,798,466 |

### 2.2.2 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

ஒட்டுமொத்த வருமான விடயங்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 33,429,322 ஆன மீதியொன்று நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறே வருமான பதிவேடு நாளதுவரையாக தயாரிக்கப்படாமை மற்றும் வருமான விடயங்களுக்குரிய கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்பட்டமையால் அவ்விடயங்களின் செயலாற்றலை திருப்திகரமாக பரீட்சிக்க முடியாமல் இருந்தது.

### 2.2.3 வீதவரி

(அ) 2011 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீதவரி சேகரித்தலின் போது நிதி முறைகேடுகள் கண்டறியப்பட்டதுடன் மேலும் துறையில் அந்நிதி முறைகேடுகளுக்குரிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டு வந்தன. இது தொடர்பான மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப மற்றும் இறுதி பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 16,918,855 ஆன நிலுவை வீதவரி மீதியின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாமல் இருந்தது.

(ஆ) 2015 சனவரி 01 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஏக்கர் வரி தொடர்பான காணிப் பதிவேடொன்று மேற்கொள்ளப்பட்டு வருடாந்த பட்டியலிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரிகளிடம் இருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 662,020 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 14,922,420 தொகையும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை அடையாமை**

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 15 வெவ்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 4,200,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 11 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 21,950,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 4,960,429 தொகை அதாவது 0.48 சதவீதத்திற்கும் 29 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீதத்தில் செலவிடப்பட்டமையால் செலல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கூட்டிணைந்த திட்டம்**

2015 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நான்கு இரண்டு திட்டத்தின் மூலம் 2017 முதல் 2020 வரையான காலப்பகுதியில் ரூபா 145,330,000 ஆன நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு 557 நிர்மாணங்கள் வேலைகள் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்தது. திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 41,550,000 பெறுமதியான 139 நிர்மாண வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஏனைய நிர்மாண வேலைகளை மேற்கொண்டமையால் சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த நான்கு ஆண்டு திட்டம் செயல்ரீதியான மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை.

**(இ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

மீளாய்வாண்டில் சபை நிதியத்தின் கீழ் ரூபா 4,121,172 ஆன மதிப்பிடப்பட்ட 10 அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 2016 செப்தெம்பர் முதல் 2017 செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் காலதாமதத்தின்

பின்னர் அந்நிர்மாணங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டு சபையின் செயலாற்றல் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

**(ஈ) நோக்கங்களிலிருந்து விலகி செயற்பாடுகள்**

1000 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேசத்தின் கூடிய நலனாளிகள் அளவு மேவுகை செய்யப்படும் வகையில் வீதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,500,000 ஆன மதிப்பீட்டின் கீழ் 06 நலனாளிகளுக்கு மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் வகையில் கெலமல்தெனிய வைத்தியசாலைக்கு அருகிலுள்ள குறுக்கு வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

**(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் கீழ் உடுநுவர பிரதேச சபை அதிகாரப்பிரதேசத்தில் சேரும் கழிவுகள் முறையான முகாமைத்துவம் செய்து வெளியேற்றும் நோக்கில் கிரிவுவல மானெல் அங்க கழிவுப்பொருள் வெளியேற்றும் தொகுதியை பௌதீக பரிசோதித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ரூபா 4,283,097 நிதிஏற்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு 2015 செப்தெம்பர் 11 ஆந் திகதி மீண்டும் பாவனைக்கு எடுக்க முடியாதவற்றை பாவனைக்கு எடுக்க முடியாத மாற்றுதல் என்ற தலைப்பினை முன்னுரிமையாகக் கொண்டு கொம்போஸ்ட் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 சனவரி 21 ஆந் திகதி அளவில் அந்த கொம்போஸ்ட் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது.

(ii) கொம்போஸ்ட் உற்பத்திக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிட வளவு அதற்காக பயன்படுத்தப்படாமல் உக்காத பொருட்கள் பாரியளவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

**(ஊ) சுற்றாடல் சிக்கல்கள்**

(அ) வெளிக்களத்தில் சேகரிக்கும் உக்காத பொலித்தின் மற்றும் உக்கக்கூடிய கழிவுகள் கலந்து கழிவுப்பொருட்கள் இடப்படும் பூமியின் பள்ளப்பகுதிக்கு முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டிருந்ததுடன் மழை நாட்களில் கீழ் பகுதியின் நீரேந்து பகுதிகளில் கழிவு நீர் சேர்ந்து காணப்பட்டு வந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் கிரிவாவுல கழிவுப் பொருள் பிரிவில் கழிவுப் பொருள் வெளியேற்றுதல் இடம்பெற்ற போதிலும் 2018 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை அதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் NP/SP/SDG/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி

அடைந்து கொள்வது தொடர்பாக சபை அறிந்திருக்காததுடன் அதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

----------------------------------------------------------------

(அ) 2005 செப்தெம்பர் 22 ஆந் திகதி பொதுச்சபை அங்கீகாரத்தின் பிரகாரம் குளோபல் கம்பியூட்டர் சிஸ்டம் நிறுவனத்திடமிருந்து ரூபா 42,000 இற்கு வீதவரி மென்பொருளொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வீதவரி மென்பொருள் பயன்படுத்தியமையால் கடந்த ஆண்டுகளில் நிதிமுறைகேடுகள் இடம்பெறுவது தொடர்பாக கணக்காய்வு விசாரணைகள் வழங்கியிருந்தமை மற்றும் அத்தியவசிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தமை தகவல்களை தவறாக பதிதல் போன்ற பலவீனங்கள் காணப்பட்ட போதிலும் 2018 மே மாதம் வரை பழைய வீதவரி மென்பொருள் பயன்படுத்தப்பட்டு வந்தது.

(ஆ) கடன் பெற்றுக்கொண்டுள்ள ஊழியர் ஒருவரின் கடன் எல்லைக்குள் மீண்டும் கடன் தொகையொன்று கோரும்போது அவருக்கு கொடுப்பனவு செய்யக்கூடிய கடன் மீதியை மாத்திரம் ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமல் காணப்படும் கடன் மீதி தீர்வு செய்யப்பட்டுள்ளதாகவும் சம்பளத்தின் பிரகாரம் செலுத்தக்கூடிய மொத்தக் கடன் தொகையையும் மீண்டும் கொடுப்பனவொன்றாக கருதி தவறுகளுடன் பதிவேடுகளுக்கு உட்படும் முறையற்ற முறைமையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒவ்வொரு ஊழியர்கள் கடன் மீதி மற்றும் வட்டி என்பவற்றை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

--------------------------------------------------

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை இடையே 14 பதவிகளில் வெற்றிடங்களும் 01 பதவியில் வெற்றிடமொன்றும் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 391,762 ஆன கடன் மீதியொன்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

----------------------------------------------------------------

2016 மார்ச் 17 ஆந் திகதிய 2016/03 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட்ட கடை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும் தவுலகல வர்த்தக கடை தொகுதியில் காணப்படும் 09 கடைகளுக்காக 2011 ஆம் ஆண்டின் மதிப்பீடு அடிப்படையாக கொண்டு வாடகை அறவிடப்பட்டு வந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்கள் ஆவணங்களுக்கு உட்படுத்தப்படாமை**

சபைக்குச் சொந்தமான ரூபா 83,982,759 பெறுமதியான 151 நிலையான சொத்து உருப்படிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற / குறைபயன்பாடுடைய சொத்துக்கள்**

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 2,636,000 பெறுமதியான 04 வாகனங்கள், 07 மாதங்களுக்கும் 08 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியில் ஓட்டத்தில் ஈடுபடுத்தாமல் விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன.

(ஆ) பெறுமதி இனங்காணப்படாத மோட்டார் வாகனமொன்றும் 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்ற வகையில் அழிவடைவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தத.

(இ) மக்கள் வங்கி தவுலகல கிளையில் சபையின் பெயரில் பேணப்பட்டு வந்த வங்கிக் கணக்கொன்றில் வருடக் கணக்காக ரூபா 639,444 மீதியொன்றுடன் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் செயலாளரால் சபையின் முச்சக்கர வண்டியை சொந்த தேவைக்காக ஓட்டத்தில் ஈடுபடுத்திய போது 2017 மே 13 ஆந் திகதி விபத்திற்குட்பட்டிருந்தது. அது தொடர்பாக முறைப்படி செயற்படுத்தாமல் சாரதியின் வருகை நேரம் மாற்றப்பட்டு மற்றும் பொலிஸிக்கு விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பம் அறிக்கையிடாமல் ரூபா 33,960 தொகை திருத்தங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

**3.7 பெறுகைகள்**

**3.7.1 வருடாந்த பெறுகை திட்டம்**

2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் அடுத்துவரும் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் மூலதன செலவினத்திற்காக ரூபா 8,110,000 மற்றும் மூலதன சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பு ரூபா 1,350,000 வருடாந்த பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கையில் அச்செலவின விடயத்திற்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 ஒப்பந்த நிர்வாகம்**

போயகம கங்கொட எல்லை வீதி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2018 மே 10 ஆந் திகதி வரை ரூபா 211,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 1:2:4(19'') சீமெந்து, மணல் மற்றும் கல் கலவையில் 117'-0'' x 9'-1 ½'' – ''-0'5'' அளவிலும் 12.57 கனமீற்றர் அளவில் வீதி கொங்கிரீட் இடப்பட்டதாக பட்டியல் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 117'-0'x8'-1''-0'5'' அளவில் 11.16 கன மீற்றர் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் நிறைவேற்றப்படாத 1.4.1 கனமீற்றருக்கு ரூபா 26,497 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.8 வெளிப்பயையான முறைகேடுகள்

வருமான பரிசோதகரால் வியாபார அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போதும் வீத வரி மற்றும் வரி அறவிடும் போது மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக CL-01/KD/F/PS-UDN/05/2015/138-ii மற்றும் CL-01/KD/F/PS-UN/05/2017/138-iii ஆம் இலக்க கணக்காய்வு ஐய வினாக்களுக்கு மேலதிகமாக வெளிக்களத்தில் இடம்பெற்ற பரிசோதனைகளின் போது ரூபா 22,548 ஆன நிதிமுறைகேடுகள் கண்டறியப்பட்டன.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருமானச் செலவினக் கணக்கில் சகல மீதிகள் பெறுமதிகள் சரியாக தயாரிக்கப்படாமையால் பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் உள்ளவாறான செலவினத்துடன் ஒப்பிட முடியாதிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீட்டு குறைபாடுகள் | i. | கணக்கேடுகள் மற்றும் ஆவணங்கள் நாளதுவரையாக்கப்படாமை |
| | | ii. | உரிய கணக்கீட்டு கோட்பாடுகள் பின்பற்றப்படாமை |
| (ஆ) | சொத்துக்கள் / ஆதனங்கள் | i | சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |
| | | ii. | ஏடுகள் நாளதுவரையாக்கப்படாமை |
| | | iii. | விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டமை |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | i | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமை |
| | | ii. | தீர்வுசெய்யப்படாத கடன் மீதிகள் காணப்படல் |
| (ஈ) | செயற்திட்டங்கள் / ஒப்பந்தங்கள் | i | நிர்மாணம் ஏற்றுக்கொண்ட நியமங்களில் காணப்படாமை |
| | | ii. | போதியளவு கண்காணிப்பொன்றில்லாமை |
| (உ) | வருமான நிர்வாகம் | i | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | | ii. | பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை |